## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ஆம் நாள் வியாழக்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆடித் திங்கள் 22–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.594/2023 –ல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.2/2025**

**1. இளவர் D.சாதனா,**
**rep. By N/F Mother guardian**
**D.அனிதா**
**2. D.அனிதா ... மனுதாரர்கள்/வாதிகள்.**

**–எதிர்–**

**1.ராமலிங்கம்**
**2.மரகதம்**
**3.லட்சுமி(இறந்துவிட்டார்)**
**4.மைதிலி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்.**

இந்த மனு 07.08.2025-ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு. A. மோகன்குமார்** அவர்களும் 03-ஆம் எதிர்மனுதாரர் இறந்த நிலையில் 01-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. S. ராஜாராம்** அவர்களும் 02-ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. M. முருகன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

வழக்கு நிலுவையில் இருந்துவந்தபோது 03-ஆம் பிரதிவாதி லட்சுமி இறந்துவிட்டதாலும் அவருடைய வாரிசுகள் ஏற்கனவே வழக்கில் தரப்பினர்களாக இருப்பதாலும் வழக்குரையில் சில திருத்தங்களை செய்ய அனுமதிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்

**06** ஆம் வகுமுறையின் **17**-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப் -பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. 01-ஆம் மனுதாரர்/01-ஆம் வாதி இளவர் ஆவார். 02-ஆம் மனுதாரர்/02-ஆம் வாதி 01-ஆம் மனுதாரர்/01-ஆம் வாதியின் தயார் ஆவார். 02-ஆம் மனுதாரர் தனக்காகவும் தன் இளவர் மகளான 01-ஆம் மனுதாரர்/01-ஆம் வாதிக்காகவும் இந்த மனு தாக்கல்செய்கிறார்.

02. வழக்குச் சொத்தில் பாகப்பிரிவினை கோரியும் தனிச் சுவாதீனம் கோரியும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இந்த முதலேற்பு வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். வழக்கு நிலுவையில் இருந்து வந்தபோது 03-ஆம் பிரதிவாதி லட்சுமி இறந்துவிட்டார். இந்த வழக்கில் உள்ள எஞ்சியுள்ள தரப்பினர்கள் இறந்துபோன 03-ஆம் பிரதிவாதியின் வாரிசுகள் ஆவர். இறந்துபோன லட்சுமியின் பெயருக்கு பின்னால் இறந்துவிட்டார் என்ற வாசகத்தை சேர்க்கவும் லட்சுமி இறந்ததால் ஏற்பட்ட பங்கு மாற்றங்களை வழக்குரையில் புகுத்தவும் மனுவில் சொல்லப்பட்டுள்ள திருத்தங்களை வழக்குரையில் புகுத்த வேண்டியுள்ளது. ஆகையால், இந்த மனுவை அனுமதிக்க வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

03. 04-ஆம் எதிர்மனுதாரரின் வழக்குரைஞர் தனக்கு எதிருரை இல்லை என்று மேலெழுத்து செய்துள்ளார். 01-ஆம், 02-ஆம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல்செய்துள்ளனர். 03-ஆம் பிரதிவாதி லட்சுமி இறந்துவிட்டார் என்பது உண்மை. அவருடைய பெயருக்கு

பின்னால் இறந்துவிட்டார் என்று வழக்குரையில் திருத்தம் செய்வதில் இந்த எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபனை இல்லை.

04. வழக்குச் சொத்துக்களில் பங்கு மாற்றம் சம்மந்தமாக மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யானவை. அத்தகைய திருத்தங்களை அனுமதிக்க முடியாது. வழக்குச் சொத்துக்கள் 01-ஆம் பிரதிவாதியின் தனிபட்டச் சொத்துக்கள் ஆகும். அவற்றில் 03-ஆம் பிரதிவாதி லட்சுமிக்கு எவ்வித உரிமையோ பாகமோ கிடையாது. அவர் இறந்ததால் இந்த வழக்கில் எவ்வித பங்கு மாற்றமும் ஏற்படாது. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

**05. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

06. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குச் சொத்துக்கள் முழுவதையும் 01-ஆம் பிரதிவாதி அவருடைய மகனும் 02-ஆம் வாதியின் கணவரும் 01-ஆம் வாதியின் தகப்பனாரும் இறந்துபோன 03-ஆம் பிரதிவாதி லட்சுமியின் மகனுமான துரைக்கு கொடையாக கொடுத்துவிட்டதாகவும் துரை 18.05.2021-ஆம் நாள் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகளுக்கிடையே பாகப்பிரிவினை செய்துக் கொடுக்க வேண்டு மென்றும் கோரி முதலேற்பு வழக்கை வாதிகள் தாக்கல்செய்துள்ளனர். வாதிகள் தரப்பு வழக்குப்படி வழக்குச் சொத்தில் பின்னிட்டு இறந்துபோன 03-ஆம் பிரதிவாதிக்கும்

பாகம் உண்டு. 03-ஆம் பிரதிவாதி இறந்துபோனதால் வழக்கில் பாகமாற்றம் ஏற்பட்டுள்ளதாக சொல்லி திருத்தம் செய்யக் கோருகிறனர்.

07. வழக்குச் சொத்துக்கள் 01-ஆம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்துக்களா? இல்லையா? வாதிகள் கோரியுள்ளபடி பரிகாரம் வழங்கத்தக்கதா? இல்லையா? என்பது வழக்கின் முழு விசாரணைக்கு பிறகு முடிவு செய்யப்படும். வழக்குரையில் வாதிகள் சொல்லியுள்ள வாதுரைகளை மட்டும் கவனத்தில் வைத்து பார்க்கும்போது மனுதாரர்கள்/ வாதிகள் கோரும் திருத்தம் அனுமதிக்கதக்கது என்றும் அவ்வாறு திருத்தம் செய்வதால் பிரதிவாதிகளுக்கு எவ்வித அநீதியும் விளையாது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதிமுடிவு**

08. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி,**
**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

**உண்மை/வரைவு ஆணையுரை**

**வ.வி.எண்.02/2025 in மு.வ.எண்.594/2023**

**நாள் 07.08.2025**